Registered as a News Paper in Ceylon P. M. G. No. H. A. 9/300 of 1953.

விரோதிஞு (1889) ஆவணி மீ 28உ ஆரம்பமானது.

# இந்து சாதனம்

சிவமயம்

வெள்ளிதோறும் வெளிவருவது

தனிப்பிரதி விலை: சதம் 10.

[புத்-எரு] யாழ்ப்பாணம்:- சோபகிருதுஞு புரட்டாதிமீ உருவ வெள்ளிக்கிழமை 11 October. 1963 | ஞல-உ அ

## நவராத்திரி - சிவராத்திரி விளக்கம்

[சிவாகம வித்வான், சிவஸ்ரீ அரு. இராமநாதக்குருக்கள்]

சோபகிருது வருஷம் ஆடி மாதம் 3-ந் திகதி வெளிவந்த இந்துசாதனம் பத்திரிகையைப் படித்தேன் அதில் மட்டுவில் ஸ்ரீ. சுப்பிரமணிய ஐயரவர்கள், "தருமபுரம் எஸ் சுவாமிநாதசிவாசாரியர் அவர்களும், அச்சுவேலி ச. குமாரசுவாமிக்குருக்கள் அவர்களும் புரட்டாதி 1-ந் திகதி ஒரு அமாவாசையும் 31-ந் திகதி ஒரு அமாவாசையும் வருவதால் அபமாதம் அதிக மாச தோஷமுள்ளதென எழுதியிருக்கிறார்கள். வாக்கிய பஞ்சாங்கப்படியென வெளியிட்டால் திருக்கணித அபிமானிகள் தங்கள் கூற்றுக்களை ஆதரிக்க மாட்டார்களென நினைத்துப்போலும்" என்றெழுதுகிறார் இதனால் வாக்கிய பஞ்சாங்கத்தைத் திருக்கணித அபிமானிகளும், திருக்கணித பஞ்சாங்கத்தை வாக்கிய பஞ்சாங்க அபிமானிகளும் ஆதரிக்கமாட்டார்களென்பதும் வெளியாகின்றது. இது உண்மையே இதனால் கணிதர்களுக்குள் மட்டுமல்ல, மக்களுள்ளும் இருகட்சிகள் இருக்கின்றன என்பது வெளிப்படை.

கோயில் அதிகாரிகளும், விதாயகர்த்தாக்களும் சாஸ்திரங்களையும் அனுபவத்தையும் பரிசீலனை செய்து தேவ காரியங்களை நடத்த முற்பட்டால் அதனோடு பஞ்சாங்கப் போராட்டம் வந்து சேருகிறது. இராமநாதபுரம் சோதிடம் திரு, கொண்டை ஐயங்காரவர்கள், அந்தக் கணித விஷயமாகக் கும்பகோண மடம் ஸ்ரீ. சங்கராசாரிய சுவாமிகளைக் கண்டு வணங்கி வாக்கிய பஞ்சாங்கம் சரியில்லை என்றால் தாம் அதற்கு ஒத்துக்கொடுப்பதாக விண்ணப்பித்தார். சுவாமிகள் அதுவும் சரியே நீ அதைக் கணித்துக் கொண்டு வா என்று அனுக்கிரகித்ததாக ஐயங்காரவர்கள் பஞ்சாங்கமொன்றில் வெளியிட்டிருந்தனர். அந்த வருஷம் முதலான விபரங்களைக் குறிக்கவில்லை;

ஒவ்வொரு பகுதியிலும் ஒவ்வொரு கோயிலிலும் ஏதேனுமொரு பஞ்சாங்கத்தைக் கணிதமட்டிலும் சரியாகவிருக்குமென்று வைத்து நடத்துவார்கள். அவர்களும் விரத உத்ஸவ விஷயங்களில் தாங்கள் சரியென்றுகொண்ட பஞ்சாங்கத்திற்கு மாறாகவும் நடத்துவர்கள் எல்லாவற்றையுமே பஞ்சாங்கப்படி நடத்திவிடமாட்டார்கள்.

இந்தியாவில் சாந்திர — சௌரமான சுதேசமித்திரன் சித்தாந்த திருக்கணித பஞ்சாங்கமென்று ஒன்றுளது. அது இராமமூர்த்திசர்மாவால் திருக்கணிதம் சித்தாந்தம் வாக்கிய முறைகளில் பேதம் ஏற்படாவண்ணம் கலந்து சரிபார்த்து இப்பஞ்சாங்கம் கணிக்கப்பட்டது என்றிருக்கிறது அதில்,

புரட்டாதி 1-ந் திகதி
செ. அமா. 51-5
கன்யாரவி 18-23
,, 2-ந் திகதி
ஆசுவினசுதகம்.
நவராத்திரிஆரம்பம்
,, 31-ந்திகதி வியா. அமா
30-28- துலாரவி 42-45
ஐப்பசி 1-ந் திகதி வெ. பிரதமை
34-54 கிருத்திகா சுதம் கந்தசஷ்டி ஆரம்பம்.
,, 6-ந் திகதி புதன் மகா
சஷ்டி சூரசம்ஹாரம்
கார்த்திகை 1-ந் திகதி
மார்கசிரசுத்தம்
,, 6-ந் திகதி வெள்ளி
சுப்பிரமண்ய சஷ்டி.

என வருகிறது. இப்பஞ்சாங்கக் குழப்பத்தில் நாம் அழுந்திக் காலததைப் போக்க வேணடாமென்பதே எனது நோக்கம். எந்த விரதத்துக்கு எந்த மாசம் சொல்லப்பட்டதோ, அந்த முறைப்படி நடத்த வேண்டும் இனி சிவராத்திரியை ஆராய்வாம்.

ஸ்ரீ. ஐயரவர்கள் சாந்திர சிவராததிரிக்கு ஆகமப்பிரமாணம் எழுதுகிறார்கள். அதாவது, உத்தரகாரணாகமம் சிவராத்திரிப்படலத்தில், சிவராத்திரியைச் சௌரமானப் படிதான் கொள்ள வேண்டும் சாந்திரமானப்படி கொள்ளக் கூடாதென்று முதல் வரிசையில் சொல்லிவிட்டு அடுதத வரிசையில் சௌரமானம் சிவபெருமானுக்கு எவ்வளவு விசேடமுடையது என்று சொல்லியிருக்கிறார். சௌரமானப்படிதான் என்று தீர்க்கமாகச் சொல்லிவிட்டுப் பிறகு இல்லை என்கிறாராம். அப்படியிருந்தால் அந்தச் சுலோகத்தை எழுதுவாராக அடுத்துக்கூறப்படுவது சாந்திரசௌரமான லக்ஷணமே யொழிய வேறில்லவேயில்லை இதனை நேயர்கள் கவனிக்கக் கடவர்.

இன்னும் அதேபடலத்தில் பன்னிரண்டு மேடாதி சௌர மாசங்களில், சித்திரை விசாகம் என்றிவ்வாறாகப் பன்னிரண்டு நக்ஷத்திரஙகள் விசேடமாகக் கொள்ளப்படுவன அந்தப் பன்னிரண்டு மாதங்களும் சைத்திரம் வைசாகம் ஆதியான பெயரையுடைய மாதங்களென்றுஞ் சொல்லப்படுகின்றன அங்ஙனமின்றிச் சாந்திரமான மாதமே அவையென்றால், சிவாகம உற்சவ விதிப்படலங்களில் உற்சவங்களையும சாந்திர மானத்திலேயே தங்கள் பஞ்சாங்கங்களில் வெளியிட்டு சனங்களை அனுட்டிக்கச் செய்யலாமே

பிரமாணங்கள் துதி, நிந்தை, விதி, விலக்கு, பூர்வ பக்ஷம், சித்தாந்தம என்பவைகளைத் தழுவி நிற்கும். ஏகதேச வாக்கியங்களைக் கொண்டு ஆகமவிபினத்திலே நுழைந்து சில வாக்கியங்களைக் கொண்டுவந்து பிரசாரஞ் செய்யவந்தால் கீழே

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## நற் சிந்தனை

—:—

நீறணிந்த திருமேனி
பொலிந்து தோன்றும்
நெற்றிமேற் கண்தோன்றும்
மதியந் தோன்றும்
ஆறணிந்த சடைதோன்றும்
அம்மை தோன்றும்
அரைக்கசைத்த புலியாடை
அசைந்து தோன்றும்
ஏறமர்ந்த எழில்தோன்றும்
இசையுந் தோன்றும்
எடுத்ததிருப் பதந்தோன்றும்
மழுமான் தோன்றும்
பேறளிக்குந் திருக்கரத்தின்
பெருமை தோன்றும்
பிரியாமல் என்னையாள்
பெருமானுர்க்கே. 1

வித்தாம் முளையாகும் வேரே தானும்
வேண்டும் உருவமாம் விரும்பி நின்ற
பத்தாம் அடியார்க்கோர் பாங்க னுமாம்
பால்நிறமுமாம் பரஞ் சோதி தானும்
தொத்தாம் அமரர்கணஞ் சூழ்ந்து போற்றத்
தோன்றுதேன் உள்ளத்தி னுள்ளே நின்ற
கத்தாம் அடியேற்குக் காணு காட்டுங்
கண்ணுங் கருகாவூ ரெந்தை தானே.

x x x

ஊனுகியூனுளுயிராயுயிர்தோறுமாகி
வானுதியானபொருளாய்மதியாகிவெய்யோன்
ருனுகியாண்பெண்ணுருவாகிச்சராசரங்க
ளானுன்சிவன்மற்றவனீள்கழற்கன்புசெய்வாம்.

## அளவெட்டி அருணுசலம் வித்தியாசாலை பெற்ருர் ஆசிரியர் சங்க விழா

சென்ற 2-10-63 புதன் கிழமை அளவெட்டி அருணுசலம் வித்தியாசாலையில் பெற்ருர் ஆசிரியர் சங்க விழா நடைபெற்றது.

தெல்லிப்பளை வட்டார வித்தியாதரிசி திரு. ஆ. சிவகுரு பீ. ஏ. அவர்கள் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கினர். தலைமையாசிரியர் திரு மு. கணபதிப்பிள்ளையவர்கள் தலைமை வகித்தார்.

அருணோதயக் கல்லூரி அதிபர் திரு. சு. சிவசுப்பிரமணியம் அவர்களின் பேச்சு—

மாணவர்கள் நிகழ்ச்சிகளாக, மார்க்கண்டேயர் நாடகம் வில்லுப்பாட்டு,பாலர்பாடல், நடனங்கள் ஆகியனவும் இடம்பெற்றன.

திரு. சி. கதிரவேலு அவர்களால் பாடசாலை அறிக்கையும், திரு. வை. சோமசுந்தரம் அவர்களால் நன்றியுரையும் கூறப்பட்டன. பெருந்திரளாக மக்கள் சமுகந் தந்தனர்.

## கந்தரோடையில் ஐப்பசிப் பூரணை விழா

### மேன்மக்கள் வருக!

கந்தரோடை, வெல்லன் பதி, சன்மார்க்க தவகூடம், வழக்கம்போல மகா முருகவேளின் தலைமையிற் கொண்டாட, மேற்படி நோன்புத் தினத்தை மிக்க ஆர்வத்துடன் நிச்சயித்துள்ளது. இவ்வகைப் பக்தியில் புண்ணியப் பிரணவ நோன்பில், ஆர்வமுள்ள பல அன்பர்கள், சொற்பொழிவுரை செய்வார்கள். திருமுறைகளோடு கூடிய இன்னிசைப் பக்திப் பாடல்கள் பாடுவார்கள். கலை வளர்வை - ஆசாரத்தை முன்னிட்டு முதல் மாணவருக்கு ஆயிரம் ரூபா (1000) பரிசு கொடுக்கும பரீட்சைத் தகுதிகளும், இங்கே விபரிக்கப்பெறும். மாணவரும் பெரியோரும் ஆண பெண் இருபாலாரும் அமைதி நிலவ இவ்விழாவில் வந்தறிக.

"மேன்மைகொள்சைவநீதி" யும் சைவமும் - லசவசமயமும் வெறுங்கருத்தில்அமையவில்லை, எம்முன்னோருலகில் பிரணவ நோன்பு விழா ஆராதனைகளும், உத்தம தாயன்பைப் போற்றிப் பெருக்கி ஆராதிக்குங்கொள்கைகளும், அடிப்படையிற் சிறந்த கொள்கைகளாக வளர்ந்து வந்தன. இவ்வகை நெறிகள் தான், உத்தம விழாக்களின் கொள்கைகளாக எம் முன்னோருள்ளங்களில் வளர்ந்து நல்ல விழாக்களை அடிக்கடி தோற்றுவித்தன.

ஐப்பசி மீ பூரணை விழாவுமே. (1-11-63) பிரணவ நோன்பு வழிபாட்டையும், மகாமுருகவேள்வழிபாட்டையும், சக்தி தாய்மை வழிபாட்டையும் நடத்த, இந்தவுலகில் முக்கிய நோன்பு நாள்வரிசையில் முதலிடம் பெற்றது.

எனவே, உத்தமத் தாயிடமிருந்து புண்ணியப் பசளை உதிக்கிறது - தோன்றுகிறது- எழுகிறது - பிரகாசிக்கிறது; பெரும் பொலிவைத் தருகிறது; மணமாயுங் குணமாயும நல்லதில் மிகுந்து மிளிர்கிறது; திறமாகப் பல பாங்கரிலுஞ் சோபிக்கிறது. புண்ணியப் பசளையினால் பிரணவ நோன்பு, சக்தி தாய்மை நோன்பு நல்விழாக்கள், சைவஞ்சான்ற சைவசமயஞ் சான்ற "மேன்மை கொள் சைவநீதிகள்" சிவசாம்பிராச்சியம், திருப்பெருந்துறை. சிவன் ஆண்டு, சிறு குடில், குடிக்கூலி முதலாய தாற்பரியங்கள் நீண்ட விரிவாக

(தொடர்ச்சி 4-ம் பக்கம்)

## 'பசனை புரியுமன்பர் கருத்திலிருக்கும் தாயே!

★

"அளவையூர் - சஞ்சீவி"

இராகம்: கரகரப்பிரியா :: தாளம்: ஆதி

பல்லவி

ஹர ஹரப் பிரியநாமம் பஜனை புரியுமன்பர்
கருத்தி லிருக்கும் தாயே! — சம்போசங்கர (ஹர)

அநுபல்லவி

திரிபுர சுந்தரி சிவகருணாகரி
ஸ்ரீவர தேஸ்வரி செல்வமனோகரி (ஹர)

சரணம்

வருபிறப் பிறப்பால் மதிபத ருமல்
வல்வினை நோயால் மனம்சித ருமல்
வறுமை சிறுமையால் வாய்கத ருமல்
மந்திரச் சைவத்தமிழ் மரபுதவ ருமல் (ஹர)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்
வாழ்க அந்தணர் வானவரானினம்
வீழ்கதண்புனல்வேந்தனுமோங்குக
ஆழ்க தீயதெல்லா மரனுமமே
சூழ்க வையகமும் துயர் தீர்கவே.
திருச்சிற்றம்பலம்

# இந்துசாதனம்

சோபகிருது ஹூ புரட்டாதிமீ
உரு உ வெள்ளிக்கிழமை

## ஈழத்தில் இல்லையாம் இனவிபரீதம்?

உலக அரசுகள் ஒன்று சேர்ந்து மாமன்றமாய் இயங்கும் ஐக்கிய நாடுகள் பேரவை என்ற (U. N. O) நிலையத்தில் ஈழத்தின் சார்பாகத் திரு. குலரத்தின அவர்கள் இங்குள்ள உண்மை நிலையைத் திரித்துக்கூறி இன, மத, மொழி அடிப்படையில் எவ்வித சட்டங்களும் சுதந்திர இலங்கையில் இடம்பெறவில்லை என எடுத்துரைத்த செய்தியைத் தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்லச் சிங்களம் பேசும் மக்களுமே மறுக்கப் பின்னிற்கமாட்டார். உள்ளதை உரைக்க முடியாவிட்டால் ஒன்றையுமே எடுத்துச்சொல்லாமல் இருக்கலாமே. மாநிலத்துக்கு ஒரு தனிமன்றமாய் அமைந்திருக்கும் இப்பேரவையிற் பேச்சாளர்களாக அமைபவர்கள் பொருட்பொலிவு சொற்சுவை முதலிய அணிகளை அமைத்து உரையாற்றி விட்டாற் போதாது; உண்மையை உரைத்தல் வேண்டும் "வாய்மையெனப்படுவதியாதெனில் யாதொன்றும் தீமை இலாத சொலல்" என்ற கருத்தைப் பேராசிரியராய்த் திகழ்ந்த திரு. குலரத்தின ஆங்கில சிங்கள நூல்களிற் காணவில்லைப் போலும். தமிழ்பேசும் மக்களைப் பாதிக்கவும் பரம்பரையை வேரொழிக்கவும் இனப்பான்மையிலே தனிச் சிங்களச்சட்டம் இயற்றப் பெற்றதை உலகம் அறியும். திரு. குலரத்தின இதைத் திரித்துக்கூறினும் புறநாட்டுத் தலைவர்கள் நம்பிவிடுவார்களா?

தன்னெஞ்சறிவது பொய்யற்க என்ற ஒழுக்க நெறியைப் பன்னெடுங் காலம் ஆசிரியராகப்பணியாற்றிய திரு. குலரத்தின மறந்துவிட்டாரா? உலகம் அறிந்த உண்மை ஒன்று உண்டு. அந்நியராட்சித்தளையினின்றும் விடுபட்ட நாடுகள் பலவற்றிலும் தன்னயங் கருதும ஆட்சி, இனம் மதம் மொழி என்றவகையில்அமைக்கப்பெறுவதால் ஆங்கெல்லாம் கருத்து வேற்றுமையும் கலகமும் நிலவியவண்ணமாய் இருக்கும் என்பதே.

திரு. குலரத்தினவின் கூற்றுத் தமிழ்பேசும் மக்களால் மறுக்கப்பெறுகின்றதென்பதை இந்தப் பேரவையில் யார் எடுத்துக் கூறுவார்களோ யாமறியோம். ஒவ்வொரு நாட்டின் உண்மையான நிலைமையையறிந்து அறிக்கை வெளியிடுவதற்கு இப்பேரவையார் ஒழுங்குகள் செய்தல் வேண்டும். அத்தகைய ஆராய்ச்சிக் குழுவொன்று ஈழத்துக்கு வந்தால் அடுத்த நாழிகையிலேயே உண்மையை அறிவார்கள். சிங்களமும் தமிழும் தொன்றுதொட்டு நாட்டின் மொழிகளாகச் சம உரிமையும் வரிசையும் பெற்றிருந்தன என்பதை உணருவார்கள். இப்பொழுது அந்நிலைமை மாறி ஒரு மொழியை ஒதுக்கித் தனிமொழி இயங்குகின்றதென்பதைக் காண்பார்கள். உள்ளங்கையில் நெல்லிக்கனிபோல உள்ளதை உள்ளவாறு பார்ப்பார்கள்.

நாம் ஒரு யோசனை கூறுகின்றோம். உலக அரசுகள் ஒன்றுசேர்ந்தியங்கும இப்பேரவையில் ஒவ்வொரு நாட்டின் ஆட்சிக்கட்சி உறுப்பினரை விட எதிர்க்கட்சிகளின் சார்பிலுள்ளோர் உரிய நேரத்தில் ஆட்சேபனை எடுத்துரைக்கக்கூடியதாகஒழுங்குவிதிக்கப்பெறுதல் நன்று.

—0—

நேயர்கள் நெஞ்சம்

### திருக்கணித பஞ்சாங்கத்தின்

# நவராத்திரி - சிவராத்திரி விளக்கம்

திருக்கேதீச்சரம் - சிவானந்த குருகுல வெளியீடாக "நவராத்திரி - சிவராத்திரி விரத நிர்ணயம்" என ஒரு சிறு புத்தகம் வெளியிடப்பட்டுள்ளது. அது எப்போது வெளியிடப்பட்டதென்பது தெரியவில்லை. அதில் குருக்கள்மார் இருவரும் சிவாசாரியர்கள் இருவரும் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டுள்ளனர். அவற்றில் நவராத்திரி விஷயமான நிர்ணயத்தில் சந்தேகமில்லை. வாக்கிய கணிதப்படி கொள்வது சரியா? திருக்கணித பஞ்சாங்கப்படி கொள்வது சரியா? என்பதில்தான் சந்தேகமுள்ளது.

பேரறிஞர்களானகுருக்கள்மார்களும் சிவாசாரியர்களும் இச் சோபகிருது வருஷத்தில் புரட்டாதிமாதத்தில்இரண்டு அமாவாசை வருவதால் அது மலமாத தோஷ முடையது நீக்கப்பட வேண்டியது, என்றும்; ஐப்பசி மாதத்திலேயே நவராத்திரி கொள்ள வேண்டும் என்றும் கூறுகிறார்கள். இதனை அவர்கள் வாக்கிய பஞ்சாங்கத்தைக் கொண்டே அறிந்திருக்க வேண்டும். அதுபோலவே திருக்கணித பஞ்சாங்கங்களையும் பார்த்திருந்தால் ஐப்பசி மாதத்தில் இரண்டு அமாவாசை வருவதால் அது மலமாத தோஷமுடையது நீக்கப்பட வேண்டியது என்றும் புரட்டாதி மாதத்திலேயே நவராத்திரியும், தீபாவளியும் கொள்ளப்படவேண்டுமென்றும், கந்தஷஷ்டி கார்த்திகை மாதத்தில கொள்ளப்படவேண்டுமென்றும் அறிந்திருப்பார்கள். அவர்கள் திருக்கணித பஞ்சாங்கங்களைப் பாராமலோ பார்த்தும் பாராமுகமாகவோ விட்டமை அவை மேலைத்தேசத்து மிலேச்சரது திருக்கணித முறைப்படி கணிக்கப்பட்ட அவைதிக பஞ்சாங்கங்கள் என்று எண்ணிப்போலும்!

வாக்கிய பஞ்சாங்ககாரர்கள் பலபட முயற்சித்தும் கிரகண விஷயத்தில் தங்கள் கணித முறை சரிவராமை கண்டு, மறைமுகமாகவும மேலைத்தேசத்து மிலேச்சரது அவைதிக திருக்கணித முறையையே பின்பற்றிக் கிரகணங்களைக் கணித்து வெளியிட்டு வருகின்றனர் அங்ஙனம் அவர்கள் செய்வதைப் பிரதானமாகச் சந்திர கிரகணததில் காணலாம். சந்திர கிரகண மத்திய காலமும் பூரண முடிபும் முன்பின்னாக அரை நாழிகை வித்தியாசம இருக்குக என்பது நியதியாகும் அதற்கு மாறாக அதிக வித்தியாசமிருப்பதால் பூரண கணிக்கப்பட்டது வாக்கியப்படியெனவும், கிரகணம கணிக்கப்பட்டது திருக்கணிதப்படி யெனவும் விளங்கும இக்கிரகணங்களை நாங்கள் பரமவைதிகமாக ஏற்றுக்கொண்டு கிரகண புண்ணிய காலத்தில் செய்யும் வைதிக சைவ கர்மாக்களையும் அனுஷ்டித்து வருகின்றோம.

கிரகணங்களைக் கணிப்பதற்குச் சரிவராத வாக்கிய கணித முறை திதி நக்ஷத்திரங்களின் ஆதியந்தங்களையும் மாதங்களின் ஆதியந்தங்களையும கணிப்பதற்கு எங்ஙனம சரிவருமோ?

சிவஸ்ரீ அரு இராமநாதக் குருக்கள் அவர்கள் எழுதிய பகுதியில் ஓரிடத்து, "இராமநாதபுரம ஜோதிஷம் திருகொண்ணை ஐயங்காரவர்கள் அந்தக் கணித விஷயமாகக் கும்பகோணம ஸ்ரீ. சங்கராசாரிய சுவாமிகளைக கண்டு வணங்கி வாக்கிய பஞ்சாங்கம சரியில்லையென்றால் தாம் அதற்கு ஒத்துக் கொடுப்பதாக விண்ணப்பித்தார். சுவாமிகள் அதுவும் சரியே நீ அதைக் கணித்துக் கொண்டுவா என்று அனுக்கிரகித்ததாக" உள்ளது கும்பகோணம மடத்துப் பஞ்சாங்கமாக ஒரு சிறந்த திருக்கணித பஞ்சாங்கததை வெளியிட அனுக்கிரகித்துள்ள சுவாமிகள் அதறகு முழுவதும் மாறான வாக்கியபஞ்சாங்கத்தையும சரியென்று வெளியிட அனுக்கிரகித்ததாகக் கூறுவது எதுவரையும உண்மையோ தெரியவில்லை அப்படிச் சுவாமிகள் அதுவும் சரியென அனுக்கிரகித்தது உண்மையானால் வாக்கிய பஞ்சாங்கப்படி புரட்டாதியும, திருக்கணித பஞ்சாங்கப்படி ஐப்பசியும் மலமாத தோஷமுடையனவாய் நீக்கப்பட வேண்டியன ஆகின

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

# நவராத்திரி-சிவராத்திரி

1-ம் பக்கத் தொடர்ச்சி

தடுக்கவும் மேலே இடிக்கவும் சங்கடமான நிலைதான் ஏற்படும்.

ஸ்ரீ ஐயரவர்கள் உதகரித்த "ரவௌகும்பங்கதே பூர்வ மாஸாங்தே ப்ரபூஜயெத்" என்னும் பூர்வகாரணகம வாக்கியத்துக்கு, 'சூரியன் கும்ப ராசியை யடைந்தபொழுது அதன் முதலாவதான தை மாசக் கடைசித் தினத்தில பூசிக்க வேண்டும்" என்பதே அர்த்தமாகும். இந்த விபரங்கள் பின்னர் எழுதப்படும் சுலோக வியாக்கியானததிற் காணலாம். உத்தரகாரணகமத்து இரண்டாவது சுலோகத்தல் "மாகபால் குனயொ: கிருஷ்ண சதுர்த்தஸ்யாம் சுபேதினே' என்றிருக்கிறதே தவிர "புஷ்பமாகயோ:' என்று வந்திருக்கிறதா என்பதைக் கவனிக்கவும், இதற்கு மாகமாசத்தில் (மாசியில் பால்குணத்தில் (பங்குனியில்) என்றுதான் அர்த்தமாகும்.

இதுநிற்க சூரிய சித்தாந்தத்தில் "திதி விவாகம் முதலிய வைகளும் பிறகருமங்களும் சாந்திரமானத்தால் கொள்ள விதியுளது" என்கிறார் ஸ்ரீ ஐயரவர்கள். விவாகத்தைச் சாந்திரமானப்படி மாசி மார்கழியிற் செய்வாரா? இது விஷயமாகச் சுருக்கிக் கூறுவதாவது:- ஆகமங்களில் வருகிற மாகமாதம் என்பதைச் சாந்திரமானமென்று மட்டிலும் சொல்லிவிட முடியாது பின்வரும் சுலோக வியாக்கியானத்திலுள்ள "தம்பங்க தேசவிதரி" "கும்பங்கதே, திவாநாதே" இத்தியாதி வாக்கியங்களாலென்க.

ஆகமத்துக்கு முரணான புராணேதிகாசங்களைக் கொண்டு கோயில்களில் நடைபெறும் விஷயங்களுக்குத் தடைசெய்ய முடியாதென உணரவேண்டும்.

இனி வித்தியா வார்த்திகத்தில் மோக்ஷசாதனலக்ஷணத்திலுள்ள சிவராத்திரி நிர்ணயத்தில் மாசநிர்ணயஞ் செய்திருக்கும் சுலோகப்படி,

கிருஷ்ணபக்ஷ சதுர்த்தசி இராத்திரியில் மாசிமாதமாத்திர சமபந்தமுடையது; மாசி பங்குனி சம்பந்தமுடையது; தை மாசி சம்பந்தமுடையது: பங்குனிமாத சம்பந்த மாத்திரமுடையது என்றிவ்விதமுள்ள நான்கு பிரிவுகளில் முதற்பிரிவு இல்லாத வஷயத்தில் இரண்டாவது பிரிவு விதிக்கப்பட்டிருக்கிறது இரண்டாவது பிரிவு இருந்தபோதிலும் முதற்பிரிவு இருக்குமேயானால் அந்த முதற்பிரிவே விதிக்கப்பட்டிருக்கிறது. இரண்டாவது பிரிவு தள்ளத்தக்கது என்பது அர்த்தம்.

மாசி சங்கிராந்தியானது பகலில் வருமாகில் அப்பொழுது இராத்திரி முழுவதும் கிருட்ண சதுர்த்தசியானது மாசியிலிருக்கிறதாக ஆகும். அதுமுதல் மாசி மாதமேயாதலால், மேன்மையான அந்தச் சிவராத்திரி உத்தமோத்தமமாகும்

அதில்லாத பட்சத்தில் இராத்திரியில் மாசி, பங்குனி என்னும் இரண்டுமாச சம்பந்தத்தையுடைய சிவராத்திரியானது மாசி மாதத்தின கடைசித்திகதி இராத்திரியில் பங்குனிமாதப் பிறப்பாகும். அப்பொழுதும் மாசிமாதத்தின் கடைசித்தினமே. அப்படியிருந்தபோதிலும் இராத்திரி பாகத்தில் பங்குனி மாத சம்பந்தத்தால் உத்தமமென்று கூறப்படும்.

மேற்சொன்ன இரண்டாவது சிவராத்திரி இல்லாத பட்சத்தில் இராத்திரியில் தை மாசி என்னும் இரண்டு மாத சம்பந்தத்தையுடையதான சிவராத்திரியானது தைக் கடைசித்திகதி ராத்திரியில் மாசி மாதப்பிறப்பு வருமானல் அப்பொழுது இராத்திரியின் பாகத்தில் தைமாத சம்பந்தத்தினல் அந்தச் சிவராத்திரியானது மத்திம சிவராத்திரியாகும்.

முன்சொன்ன மூன்றுவது சிவராத்திரி கிடையாத விடயத்தில் இராத்திரி முழுவதும் பங்குனிமாதத்திலிருக்கிற சிவராததிரியானது பகலில் வரும் பங்குனிமாதச் சங்கிராந்தியினல ஆகும். அந்தத்தினம் முதல் பங்குனி மாதந்தானே. பங்குனிமாத சம்பந்த மாத்திரத்தால் அது அதம சிவராத்திரி.

இராத்திரி முழுவதும் தை மாதததை அடைந்த சிவராத்திரியானது பாபத்தைக் கொடுக்கக்கூடியது; விதிக்கப்பட்ட காலத்தைச் சேராததால் தள்ளத்தக்கது; ஏனென்றால் சந்தியா என்பது முதலான வாக்கியத்தினல் சந்தியாகாலத்தில் சந்தியாவந்தனதி கர்மத்தைப்போல மாசி மாதத்தில் சிவராத்திரி பூசை பூதம்வதிஷயே....... தபோவதிஷ்யே என்ற சுருதியினலும், பூதம் தபஸ் என்று சொல்லப்படவே, (தபோமாஸஏவ விஹிதம்) மாசிமாதத்திலே தானே விதிக்கப்படுகிறது.

"தபஸ்ச தபஸ்யச்ச சைசிரளருதன" என்ற சுருதியினலே மாசிமாதமானது தபஸ், பங்குனிமாதம் தபஸ்யம். மாசி பங்குனி மாதங்கள் மாகபால்குன மாதங்களென்று பிரசித்தம். அவ்விரு மாதங்களும் சாந்திர மாசி பங்குனி என்று சொல்வதாகவிருந்தால் சொல்லல் ஆகாதோ என்றால், சமாதானம் சொல்லுகிறார். பத்ரம் என்ற வாக்கியம் முதலியவற்றால் விவாகம் முதலான சுபகாரியத்தில் சாந்திரமானப்படி மார்கழிமாதத்திலிருக்கிற தைமாதமபோல, தை மாதத்தையடைந்த மாசிமாதமானது அந்தச் சிவராத்திரி விரதத்தில் தள்ளத்தக்கது.

மேல் வியாக்கியானத்திலுள்ளவைகளில் இன்னுஞ் சிலவற்றை எழுதுகின்றேன்.

"கேவலம தைமாதத்தையடைந்த சதுர்த்தசி திதியானது விதிக்கப்படாமலிருப்பதனாலேயே சந்திரகிரகணத்தைத்தவிர இதரமான இராத்திரியில் பிதிர்த்தர்ப்பணம் எப்படியோ அப்படிப் பாபத்தைக் கொடுக்கிறதாய்த் தள்ளத்தக்கது என்பதாம்,

இன்னும் சித்தாசமத்திலே" சௌரம் சாந்திரம் நட்சத்திரம் சாவனம் என்னும் நான்குவித மாதங்களில் நட்சத்திர சாவனங்களைத்தள்ளி சிவராத்திரியில் சௌரமானத்தினலே ஸ்திரலிங்காரசசனஞ் செய்ய வேண்டும். கிருகத்தில் ஆத்மார்த்தலிங்க பூசையைச் சாந்திரமானப்படி செய்ய வேண்டும். இல்லையானல் இரண்டையும் சௌரமானப்

(தொடர்ச்சி 3-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்கணித பஞ்சாங்கத்தின் நவராத்திரி - சிவராத்திரி விவக்கம்

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

றன. ஆகவே இவ்வருஷத்தில் நவராத்திரியும், தீபாவளியும இல்லாதொழியும்,

பாரதநாட்டு அரசினர் தம் நாட்டில் பலவேறு வகைப்பட்ட பஞ்சாங்கங்களால் வைதிக சைவ வைஷ்ணவ விரதங்களும பண்டிகைகளும் மாச சங்கிராந்தி, அயனசங்கிராந்தி, வருஷசங்கிராந்தி முதலியவைகளும் வெவ்வேறு தினங்களில் கொள்ளப்பட்டு வருதலைக் கண்டு அவைகளையெல்லாம் ஒரு சீரான முறைக்குக் கொணடுவரக்கருதி வானஜோதிஷ் விற்பன்னர்களான பல பேரறிஞர்களைக் கொண்ட "பஞ்சாங்க சீர்திருத்த சபை" ஒன்றினை ஏற்படுத்தினர். அச்சபையினர் பல வகைப்பட்ட பஞ்சாங்கங்களையும் ஆராய்ந்து வாக்கிய பஞ்சாங்கங்கள் சில காலங்களில் திதி முதலியவைகளின் ஆதியந்தங்களில் ஐந்து ஆறு மணிவரை வித்தியாசப்படுதலையும் காட்சிககுச் சரிவராமையும் கண்டு அவ்வாக்கிய பஞ்சாங்கங்களை விடுத்து, திருக்கணிதத்தையே ஏற்று ஒரு சீரான முறையை வகுப்பதற்கு உதவினர். தாம் ஏற்றுக்கொண்ட திருக்கணித முறைப்படி பிரகானமான பல பாஷைகளிலும் பஞ்சாங்கங்கள் வெளியிடுவதற்கும் ஏற்பாடு செய்தனர் இதனல் பாரகநாட்டு அரசாங்கம் திருக்கணிதத்தையே ஏற்றுக்கொண்டமை தெளிவாகும்.

வசிட்ட சித்தாந்தத்தில் "இத்தம் மாண்டல்யசமக்ஷோ துக்தம சஸ்த்தம் மயோதிகம, விச்ரஸத் ரவி சந்த்ராதயை பவிஷ்யதியுகேயுகே. யஸ்டிங் பக்ஷேயதரகாலேயேந திருக்கணிதக்யகம், திருஸ்யதே கேந பக்ஷேந சூர்யாத் தித்தியாதி நிர்ணயம்" எனக் கூறப்படுகின்றது. இவ்வாறே மற்றும் அனேக தெய்வக்ஞர்கள் திருக்கணிதைக்கியகம் ஜோதிஷத்துக்கு வேண்டுமெனக் கூறியுள்ளனர். இவற்றல் எங்கள் முன்னேர்கள் பலரும திருக்கணிதைக்கியத்தையே விரும்பியுள்ளமை புலப்படும்.

ஜோதிர்க்கணித நூலாசிரியர் தாம மேலைத்தேசத்து வானசாத்திர விற்பன்னர்களின் மூலாமசங்களைக் கொண்டே தம நூலை எழுதுவதாகவும், அதனல் தமது நூல் அவைதிகமாகுமோ எனின் ஆகாது. எதனல், சூரிய சித்தாந்தம மயாசுரனல செய்யப்பட்டது. யவன சித்தாந்தம், ரோமகசித்தாந்தம, பௌலிக சித்தாந்தம என்பவை மேலைத் தேசத்தவர்களால் செய்யப்பட்டவை. இவைகள் நம் முன்னேர்களால் பரமவைதிகமாக ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. எனவுங் கூறுகின்றூர். இன்னும அவர், "பொன்வாங்கச் செல்லும் அறிஞன் இது எவரால் எடுக்கப்பட்டது. எந்தத் தேசத்திலிருந்து கொண்டுவரப்பட்டது. எங்ஙனம் செய்யப்பட்டது என்று விசாரிப்ப

நவராத்திரி சிவராத்திரி ...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

படியே செய்யலாம். ஏனென்றால், சௌரபட்சம் பிரசஸ்தம் சாந்திரப்பட்சம், அசஸ்தம், சௌரம், ஸ்திரம், சாத்திரம், அஸ்திரம இது முதலானகாரணத்தால் சௌரமே ஆன்மார்த்த பரார்த்த லிங்கங்களுக்குச் சிலாக்கியமாகவிருக்கிறது இப்படி விருத்திகாரர் மாசநிர்ணயஞ் செய்துள்ளார்கள் என்பது அறியத்தக்கது.

—:—

தில்லை உரைகல்லில் மாற்றினைப் பார்த்து தனக்கு வேண்டிய பொன்னை வாங்குவான். அதுபோல எமது நூலைப் பிரத்தியக்ஷத்துக்குச் சரியாக வருகின்றதா என்று பரீக்ஷித்து ஏற்றுக்கொள்க" என்று கூறுகின்றூர். இதனல் பிரத்தியக்ஷத்துக்குச் சரிவரும கணிதமே கொள்ளததக்கதென்பது தெளிவாகும்.

காஞ்சிகாமகோடி பீடாதிபதி ஜகத்குரு சங்கராசார்ய சுவாமிகளும் நவராத்திரியும், தீபாவளியும புரட்டாதியிலும், கந்தஷஷ்டி கார்த்திகையிலும் கொள்ளப்பட வேண்டுமென அபிப்பிராயப்படுவதாக வீரகேசரிப்பத்திரிகைமூலம் தெரியவருகின்றது அதனல் மேற்படி சுவமிகளும் திருக்கணிதத்தையே ஏற்றுக்கொண்டமை அறியப்படும.

இனிச் சிவராத்திரியை ஆராய்ந்தால் வாக்கிய கணிதர்களும், திருக்கணிதர்களும் அதனைத் தைமாதத்தில் நிர்ணயித்தமை பொருந்தாது என்பது வெளியாகும. சென்ற பராபவ வருஷத்தில் (1906 — 07) தை மாதத்தில் சில பஞ்சாங்கங்களில் சிவராத்திரி குறிப்பிட்டதாகவும், அது சரியில்லையெனவும் ஸ்ரீலஸ்ரீ. சுவாமி விருதை சிவஞான யோகிகள் சித்தாந்தமாக, "மகாசிவராத்திரிநிர்ணயம" என ஒரு துண்டுப்பிரசுரம் மதுரைத் தமிழ்ச் சங்கமவர் பிரசில் அச்சிட்டு வெளியிடப்பட்டது. அதில் கரணம, காமிகம, சிந்தியம, சிந்தியவிசுவ சதாக்யம், புரோதக்தம், சந்தானம், மகுடம் என்னும் சைவாகமங்களில் இருந்து அனேக சுலோகங்கள் எடுத்துக்காட்டப்பட்டு, கும்ப மாததில் கிருஷ்ண சதுர்த்தசியில் சிவராத்திரி கொள்ள வேண்டுமென நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அதுபோலவே இவ்வருடத்திலும் கும்ப மாதத்திலேயே கிருஷ்ண சதுர்த்தசியில் சிவராத்திரி கொள்ள வேண்டுமெனச் சிவானந்த குருகுல வெளியீட்டில் நிர்ணயித்திருப்பது போற்றத்தக்கதாகும்.

இக்கட்டுரை, காரைநகர் பிரசித்த நொத்தாரிசு பிரமஸ்ரீ. கா. சி. மகேச சர்மா எவ். ஆர் ஏ எஸ் அவர்களின் உதவியோடு எழுதப்பட்டது.

சி. சுப்பிரமணிய தேசிகர்.
காரைநகர்
30—9—63.

இவ்வாரம் 13-10-63 — 19-10-63

# உங்கள் பலன்?

[ ஸ்ரீ இராதாகிருஷ்ணன் கணிப்பது ]

**மேடராசி** அச்சுவினி, பரணி கார்த்திகை முதற்கால்.

நண்பர்களுடன் சச்சரவுக்கும் தவருன விளக்கங்களுக்கும் இடமுண்டு உடல்நிலை ஊறுபடும் வயிற்றுக் கோளாறுகளுக்கிடமுண்டு. முயற்சிகளில் சிறிது பின் தங்கலாக இருப்பீர்கள், பணமளவில் ஓரளவு நல்லவாரம்.

**இடபராசி** கார்த்திகை 2, 3, 4-ம் கால்கள் ரோகிணி, மிருகசிரிடம், 1, 2-ம் பாதம்,

பணமளவில் நல்லவாரம், புதுமுயற்சிகளில் வெற்றி நிச்சயம். வியாழனுக்குப்பின் தடைகளைத் தாண்ட உம்மால் முடியும். குடும்ப நிலைமை திருப்தியாயிருககாது.

**மிதுனராசி** மிருகசிரிடம், 2 3, 4, ருவாதிரை, புனர்பூசம் 1ம், ம் பாதம்.

புதுமுயற்சிகளில் வெற்றி நிச்சயம், பண இலாபமும் உண்டாம். குடும்ப நிலைமை திருப்தியாயிருக்காது. சிறு உடல் நிலைககுழப்பங்களுக்கு இடமுண்டு.

**கடகராசி** புநர்பூசம் 4ம் பாதம், பூசம் ஆயிலியம்,

தடைகளைத் தாண்ட உம்மால் முடியும் புதுமுயற்சிகளில்வெற்றி உண்டாம். ஆனல் குடும்பத்தில் சில தவருன விளக்கங்களுககு இடமுண்டு. சுகவீனத்திற்கும் இடமுண்டு.

**சிங்காராசி** மகம், பூரம். உத்தரம் 1-ம் பாதம்.

தொழிலளவில் ஓரளவு நல்லவாரம். புதுமுயற்சிகள் தடங்கல்படும். ஆனல் வெற்றி பெறும், தம்பி தங்கைகள் மிக உதவுவர், குடும்பவிவகாரங்கள் குழப்பலாக இருக்கும்.

**கன்னிராசி** உத்தரம் 2, 3, 4ம் பாதம் அத்தம் சித்திரை 1, 2ம் பாதம்.

கல்வி ஈடுபாடுகளில் வெற்றி நிச்சயம். தொழில் வெற்றியும் உண்டாம். புதுமுயற்சிகளில்இலாபம் உண்டாம். வியாழன் வரை உடல்நிலை திருப்தியாயிருக்காது.

**துலாம்,** சித்திரை 3 4ம் பாதம் சுவாதி விசாகம் 1, 2, 3ம் பாதம்

நண்பர்களுடன் தவருன விளக்கங்களுக்கும் சச்சரவுககும் இடமுண்டு, உடல்நிலையும் ஊறுபடும். தொழிலளவில் நல்லவாரம், வேலை அதிகமாகஇருக்கும் ஆனல் போதியளவு ஈடுசெய்யப்படுவீர்.

**விருட்சிகராசி** விசாகம் 4-ம் பாதம் அநுஷம், கேட்டை.

உடல்நிலைக் குழப்பங்களுக்கு இடமுண்டு. பணபளவில் ஓரளவு நல்லவாரம். நன்மாற்றங்கள் நிச்சயம். குடும்பநிலைமை அவ்வளவு திருப்திகரமாயிருக்காது.

**தனுராசி** மூலம், பூராடம் உத்தராடம் 1ம் பாதம்.

நண்பர்கள் இடரிலிருந்து மீட்பர். புதிய முயற்சிகளில் வெற்றி உண்டாம். வேலை வழமையிலும் அதிகமாக இருக்கும். நிலபுலங்களால் இலாபம் நிச்சயம்.

**மகராசி** உத்தராடம் 2, 3, 4ம் பாதம் திருவோணம் அவிட்டம் 1, 2ம் பாதம்.

ஞாயிறு திங்கள் செவ்வாய் காலை எச்சரிக்கையோடு கழிய வேண்டும். வாரமிகுதிப் பகுதி ஓரளவுசாதகமானதாக இருக்கும். நிலபுலங்களால் இலாபமும் நிச்சயம். ஆனல்மனநிம்மதிஇருக்காது.

**கும்பராசி** அவிட்டம் 3, 4ம் பாதம், சதயம், பூரட்டாதி 1, 2, 3ம் பாதம்,

பணமளவில் நல்லவாரம் முதவிருநாட்களும் புதுமுயற்சிகளுக்கு ஏற்றவையாகும். செவ்வாய் புதன் வியாழன் காலையை எச்சரிக்கையோடு கழிக்குக. கடைசி இருநாட்களும் சாதகமாகமாறும்.

**மீனராசி** பூரட்டாதி 4, உத்தரட்டாதி ரேவதி.

இனத்தவருடன் சச்சரவுக்கு இடமுண்டு. குடும்பநிலைமைதிருப்தியாயிருககாது. உடல்நிலையும் ஊறுபடும். வியாழன் மாலை வெள்ளி சனி எச்சரிக்கையோடு கழியவேண்டும்.

0000000000000000000000000

## 'மூற்போக்காளர்' போக்கு

பெரியவர்: என்னதம்பி விழாஒன்றில் சிலஎழுத்தாளர்கள் கூழ் முட்டை வீசினூர்களாமே?

விகடன்: ஆமண்ணே! இதுவரை தங்கள் 'பே'னுவால் கருசுதுக் கூழ்முட்டை வீசி வந்தவர்கள், இப்பொழுது கையால் கூழ்முட்டை வீசுகின்றூர்கள்!

0000000000000000000000000

உ
சிவமயம்
அருணந்திசிவாசாரியார்

# குருபூசை

நாள்: புரட்டாதிமீ உவுவ (14-10-63) திங்கட்கிழமை.

இடம்: சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபம்

நிகழ்ச்சிகள்:

இரவு 7 மணி ஆரம்பம்
கடவுளாராதனை -
தமிழ்மறையோதல்
விரிவுரை:
"அருணந்தி சிவாசாரியர்"
சித்தாந்த அறிஞர்
திரு. வே சோமசுந்தரம்அவர்கள்

சைவாபிமானிகள் யாவரும் சமூகமளிப்பார்களாக

மு. மயில்வாகனம்,
சமயப்பிரசார அமைச்சர்
சைவபரிபாலன சபை,
யாழ்ப்பாணம். 9-10-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

வேலணை கிழக்கு
1. கதிரேசு சண்முகமும் பெண்
2. பொன்னம்மாவும்
—வழக்காளிகள்.

இல, M.B. 5093

எதிராக

வேலணை கிழக்கு
காலஞ்சென்ற முருகேசு கதிரவேலுவின் உரிமைத் தத்துவகாரன் ஊர்காவற்றுறை நாரந்தனை வடககு M, கதிரவேலு தியாகராசா. —எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 5093-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுகட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் ஒருதுண்டுக காணியை, 1963-ம் ஞூ ஐப்பசி மீ 26 உ சனிக்கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய் 871-ம். 10-2-62 தொடக்கம் 11-2-63 வரைக்கும் ரூபாய் 500-க்கு 12வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபாய் 220-85 சதமும்.

ஆதன விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் தீவுப்பகுதி வேலணைக் கோயிற்பற்று வேலணை கிழககிறை "ஆலம்புலம்" பரப்பு செ. இலா 20-ம் கிணறும், எல்லை கிழககு கணபதிப்பிள்ளை பெண் நாகம்மாவின் ஆதனம். வடக்கு பசுபதி கந்தையாவுக்கும் மறு பேருக்கும் உரிய ஆதனம் மேற்கு பேரம்பலம் கைம்பெண் இராசம்மாவுககுரிய ஆதனம். தெற்கு ஒழுங்கை முகப்பும் பசுபதி கைம்பெண் அன்னப்பிள்ளையின் ஆதனமும். இதில் சொரியலாய் அரைவாசியும் அதைச்சேர்ந்தவைகளும்.

அ. ஜெகநாதன்
கொம்மிஷனர் விலைமதிப்பாளர்.
16 A, அம்டன்ரூட்
கந்தர்மடம், யாழ்ப்பாணம்,
M 161 11-10-63.

## சம்ஸ்கிருத விஸ்வ பரிஷத் புத்தூர்க்கேந்திரம் பரிசளிப்பு

வருகிற ஞாயிற்றுக்கிழமை (13 - 10 - 63) மேற்படி கேந்திரத்தின் பரிசளிப்பு விழா வண்ணை - நாவலர் வித்தியாசாலையில் பிற்பகல் 3 - 30 மணிக்குத் தொடங்கும். வியாகரண சிரோமணி தி. கி சீதாராம சாஸ்திரிகள் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் திரு. மு வைத்தியலிங்கம் 'ஆரிய திராவிட இனப்பாகுபாடு' என்னும் பொருள் பற்றிச் சொற்பொழிவாற்றுவார்.

பம்பாய் - பாரதிய வித்யா பவன் சம்ஸ்கிருதப் பரீட்சைகளிலும், சென்னை - அமர பாரதி பரீக்ஷா ஸமிதியின் சம்ஸ்கிருத - இந்துசமய பரீட்சைகளிலும் சித்தியடைந்தோருக்குப் பத்திரங்கள் வழங்கப்படும். விசேஷ சித்தியடைந்தோருக்குப் பரிசில்கள் வழங்கப்படும்.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B 5294.
கந்தவனம் முத்தையா
காங்கேசன் துறை
—வழக்காளி

எதிராக
1. பூதன் நாகமுத்துவும்
2, பெண் நாகம்மா
காங்கேசன் துறை
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 5294-ம் இலக்க வழக்கில் எனக்குககிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னல் விபரிக்கப்படும் இருகண்டுக் காணி 1963 ஞூ கார்த்திகை மீ 9 உ (9-11-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 2500-ம். இதற்கு ரூபா 2000/- 1 - 1 - 63 தீர்வைத்திகதி தொடக்கம் 1-4-63வரை 100-க்கு 10 வீத வட்டியும். பின் முழுத்தொகையும் இறுபடும் வரைக்கும் 5 வீத விட்டியும் கோட்டுச் செலவு 191/55. இதில் 3-6-63 ரூபா 100 கொடுபட்டது,

காணி விபரம்:

1, வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் வடக்குப்பகுதி தெல்லிப்பளைக்கோயிற்பற்று பளை இறை "சாந்தப்பனங்காய்" பரப்பு நிலாச்சம் 4½ உறுதிப்படி. ஆனல் ஆட்சிப்படியும் அளவைப்படியும் பரப்பு நிலலாச்சம் 7 குழி 14 பனைகளும். எல்லை கிழக்கு வேலன் முத்தனுக்கும் முருகன் கைம்பெண் நாகிக்கும் உரிய காணிகள், வடக்கு அப்பலவாணர் கனகசபையின் உரிமைக்காரருக்குரிய காணிகள், மேற்கு சின்னவன் விஞசிக்குரிய காணி, தெற்கு காக்கையன் பூதனுக்கும் வயிரவன் கந்தனுக்குரிய காணிகள். இது அடங்கலில் சொரியலாய் 2/9 ஒன்பதில் இரண்டு பங்கும் அதைச்சேர்ந்தவைகளும்,

2, மேற்படி தெல்லிப்பளை கோவிற்பற்று பளை இறை "சூரியன்காடு" பரப்பு நில லாச்சம் 4 குழி 12 இதில் அறுதிவிற்ற பாகங்கள் நீக்கி மிகுதி குழி 14 வான்பயிர் செய்பயிர்களும், எல்லை கிழக்கும் வடக்கும் சிவப்பிரகாசம் கைம்பெண் நிலையறைக்கடாச்சிக்குரிய காணி. மேற்கு முருகன் பொடிசிங்கத்துக்குரிய காணி. தெற்கு ஆறுமுகம் கந்தையா பெண் மகேஸ்வரிக்குரிய ஆதனம் இது அடங்கலும். ஆனல் மேற்கெல்லைக் காணிக்காரரும் தெற்கெல்லைக்காணிக்காரரும் தெற்கருகாக கிணற்றுக்குப் போகும் நாலுமுழ அகலம் கொண்ட பாதையும் கிழக்குப் பக்கமாக இருக்கும் கிணற்றில் ஐந்திலொரு பங்கும் கிணற்றைச் சுற்றி ஏழுகுழி தார்வை செய்பயிர்களும் புறநீங்கல்,

சி. செ. மாரிமுத்து.
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.
(உத்தரவு பெற்ற ஏலதாரரும்)
விதானை வளவு
சித்தன்கேணி, 18-9-63,
M. 156 11-10-63,

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை
சுவாமியார் றோட்டு
கார்த்திகேசு நவரத்தினம்
—வழக்காளி.

எதிராக

இல. M.B. 4025
புத்தூர். புத்தூர் மேற்கு
சின்னத்தம்பி பெரியதம்பி
—எதிராளி.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டின் M.B. 4025-ம் இலகக வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் இருதுண்டுக காணிகள் 1963-ம் ஆண்டு நவம்பர் (கார்த்திகை) மாதம் 9-ம் திகதி (9-11-63) சனிக்கிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தந்தக் காணிகளுக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபாய்4888-89-ம், இதில் ரூபா 4000-க்கு 23-5-61 திகதி தொடக்கம் 26-10-61 திகதி வரைகும் 100-க்கு 10 வீத வட்டியும் பின் திகதிதொடக்கம் முழுத்தொகைக்கும் இறுபடும்வரைக்கும் 100-க்கு 5வீத வட்டியும், கோட்டுச்செலவு ரூபா 193-49 சதம். இதில் ரூபா 3150/- இறுபட்டது.

காணிகளின் விபரம்:

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வலிகாமம் கிழக்குப்பகுதி புத்தூர்க்கோவிற்பற்று புத்தூர் வடக்கிறை "வெம்பபுலம்" நிலப்பரப்பு 99-ம் வீடுகளும் செய்பயிர் வான்பயிர்களும் கிணறும், எல்லை கிழக்கு புத்தூர் தெற்கு ஊரெல்லையும் வேலாயுதர் காசிநாதருக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு ஒழுங்கை. மேற்கு ஒழுங்கையும் புத்தூர் தெற்கு ஊரெல்லையும், தெற்கு புத்தூர் தெற்கு ஊரெல்லை. இதில் சொரியலாய் எட்டில் ஒரு பங்கு (1/8).
முற்பதிவு K 210/231-ம்
K 217/147.

2. மேற்படி புத்தூர் தெற்கிறை "பிராமணன் வயல்" நெற்பரப்பு 2½-ம். எல்லை கிழக்கு வன்னித்தம்பி அப்புக்குட்டியும் மறுபேருக்குமுரிய ஆதனம். வடக்கு மளவராயர் கந்தையாவின் உரிமைக்காரருக்குமுரிய ஆதனம் மேற்கு விசுவலிங்கம் சரவணமுத்துவின் ஆதனம். தெற்கு தம்பையா முத்துசாமிக்கும் மறுபேருக்குமுரிய ஆதனம், இதில் சொரியலாய் அரைவாசி(½)
முற்பதிவு K 157/247-ம்
K 213/143

**சின்னத்தம்பி சங்கரப்பிள்ளை**
Commissioner, Valuer,
& Licenced Auctioneer
தெல்லிப்பழை, 20-9-1963.
M 153 11-10-63

## கோட்டு விற்பனவு விளம்பரம்

சாவகச்சேரி டிஸ்திறிக்
கோட்டில்
சரசாலை தம்பிராசா மனோகரன்
வழக்காளி.

எதிராக

இல. 2546
சரசாலை முருகன் கணபதி
கைம்பெண் அன்னம்மா
இவர்காலஞ்சென்ற சரசாலை முருகன் கணபதியின் ஆஸ்திகட்குப் பிரதிநிதியாக நியமிக்கப்பட்டவர். —எதிராளி.

சாவகச்சேரி டிஸ்திறிககோட்டு 2546 ம் இலகக வழககில் எனக்குக் கிடைத்த கட்டளைப்படி கீழ்க்காணுமாதன விடாப்பில் விபரிககப்படுமாதனம் 1963 ம் ஹூ கார்ததிகை மீ 2ந் உ சனிக்கிழமை காலை 10 மணியளவில் அக் காணிக்குள் நின்று என்னுற் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத் தொகை:- ரூபா: 2595-76 சதமும் 14-11-62 தொடக்கம் 25-3-63 வரைக்கும் ரூபா 2000-க்கு 10 வீத வட்டியும் பின் கூட்டி வரும் தொகைக்கு இறுக்குவ்வரைக்கும் 5 வீதவட்டியும் கோட்டுச் செலவு ரூபா 305-34 சதமும்.

ஆதன விடாப்பு

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்றிக் தென்மராட்சிப் பகுதி சாவகச்சேரிக் கோவிற்பற்று சரசாலையிறை கட்டையன்சிமா வளவும் ஐயன்பெருமி வளவும் நி.பர. 12½ ஆட்சிப்படி நி பர 18. இதிற் கிழக்குப் பககமாக நி. பர. 4 நீக்கி மிகுதி நி. பர. 14. இதில் தெற்குப் பககமாக நி பர 9. இது உத்தரவு பெற்ற உலாந்தா K. சிவஞானசுந்தரம் அவர்களால் 5ம் இலக்கப் படத்தில் விஸ்தரிக்கப்பட்டுக் காட்டிய துண்டு நி பர ஒன்பதுக்கும் எல்லை கிழக்கு ஒழுங்கையும் செல்லத்துரை பெண் ஆச்சிப்பிள்ளைக்குரியவாதனமும். வடக்கு இதிற் கழிவிடப்பட்ட மிகுதியாதனம். மேற்கு கணபதி மூத்தானுக்கும் கார்த்தி பெண் கனகம்மாவுக்குமுரியவாதனங்கள். தெற்கு ஒழுங்கை. இதடங்கலுமிதைச் சேர்ந்தவைகளைத்தும்.

மூ. நா. மார்க்கண்டு
கொம்மிஷனர்.
சாவகச்சேரி, 7-10-63.
M 158 11-10-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்
கோட்டில் வழ. இல. M B 3612

சிறுப்பிட்டி
பெரியதம்பி தம்பிமுத்து.
வழக்காளி

எதிராக

வண்ணார்பண்ணை மேற்கு பக்கீர் மொகிதின் மொகமெட் லெவ்வையின் கைம்பெண் சடுவைத்து காலஞ்சென்ற சுல்தான் மொகிதீன் நாச்சியாவின் சொத்தின் சட்டப்படியான பிரதிநிதி வண்ணார்பண்ணை மேற்கு மொகமெட் லெவ்வை மொகமெட் அப்துல்காதர், —எதிரி.

இவ் வழக்கில் எனக்குக் கிடைத்த உத்தரவின்படி கீழ்க்காணும் இரு காணிகள் 1963 ம் ஹூ நவம்பர் மீ 16 உ (16-11-63) சனிக்கிழமை முற்பகல் 11-30 மணி தொடக்கம் அந்தந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத் தொகை:- முதல் வட்டி ரூபா 2475. மேலும் 1200 ரூபாவுக்கு 23-9-60 திகதி தொடககம் 29-6-61 திகதிவரைக்கும் வருடமொன்றுக்கு 10 வீத வட்டியும் அதன் பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரைக்கும் வருடமொன்றுக்கு 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 230-05 சதம்.

காணிகள் விபரம்

1. வட மாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் பூநகரிப்பகுதி பூநகரிக கோயிற்பற்று நல்லூர்இறை "நெடுங்கேணி ஓட்டு" உறுதிப்படி நெற்பரப்பு 251. ஆனல் ஆட்சிப்படி நெ ப. 256 இதில கிழக்குப்பக்கமாக ஏற்கன வேநன்கொடையாகக் கொடுக்கப்பட்ட நெற்பரப்பு 153 குளிகள் 1/5 பிற நீங்கலாக மீகுதியான நெற்பரப்பு 102 குளிகள் 4 4/5 இதில் வடமேற்குப் பக்கமாக வயல் நெற்பரப்பு 37. குளிகள் 2 2/5 ம் தென்னம் காணி நெற்பரப்பு 14ம் சேர்த்து மொத்தமாக நிந்தமாக்கப்பட்ட நெ. ப. 51 குளிகள் 2 2/5 இதற்கு எல்லை கிழகசு மொகமெட் லெவ்வை மொகமெட் இப்பிருகிமுக்கு நன்கொடை கொடுககப்பட்ட ஆதனம். வடக்கு றோட்டும் மொகமெட் இப்பிருகிமுதனமும், மேற்கு வாய்க்காலும். குளமும் பககீர் மொகிதீன் மொகமெட் லெவ்வைக்குரிய மிகுதிப் பகுதியும், தெற்கு பககீர் மொகிதீன் மொகமெட் லெவ்வைக்குரிய மிகுதிப் பகுதியும். தெற்கு பககீர் மொகிதீன் மொகமெட் லெவ்வைக்குரிய மிகுதிப் பகுதி.

2. ஷை நல்லூர்இறை 'பெரியகமம்' நெ. ப. 185 பனைகளும் வான்பயிர்களும் இதில் வடக்குப் பககமாக நிந்தமாககப்பட்ட நெ. ப 105 க்கும் எல்லை கிழக்கு ஒழுங்கையும் வாய்க்காலும். வடககு றோட்டும். மீரான்கண்டுவுக்கும். மறுபேர்களுக்குமுரிய ஆதனங்கள், மேற்கு A கணபதிப்பிள்ளை, S. நாகலிங்கம், சேகுதம்பி, இன்னும் மறுபேர்களுக்குமுரிய ஆதனங்களும். வாய்ககாலும், தெற்கு இவ்வாதனத்தின் மிகுதிப்பகுதி.

வி. செ. குட்டிப்பிள்ளை
கொமிஷனர்.
Auctioneer & Valuer
613 காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம். 10-10-63.
M 160 11-10-63.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B. 4771.
யாழ்ப்பாணம்
டிஸ்திறிக் கோட்டில்
வட்டுக்கோட்டை
சுப்பிரமணியம் சபாபதிப்பிள்ளை
—வழககாளி.

எதிராக

தொல்புரம் யாழ்ப்பாணம்
1. வேலுப்பிள்ளை கந்தையாவும்
2. பெண் சின்னத்தங்கம்
—எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்கிறிககோட்டில் M.B 4771-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னுல் விபரிக்கப்படும் ஒரு துண்டுக காணியை 1963-ம் ஆண்டு கார்த்திகைமாதம் 21-ம் திகதி (21-11-63) வியாழக் கிழமை பிற்பகல் 4 மணி தொடக்கம் அந்தக்காணிக்குள் நின்று என்னுல் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 942, சதம் 50. இன்னும் ரூபா 500-க்கு 24-4-32 தொடககம் 8-3-63 வரைக்கும் 100-க்கு 12 வீத வட்டியும் பின்பு கூட்டுத் தொகைக்கு இறுபடும் வரைக்கும் 100-க்கு 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு ரூபா 177, சதம் 70.

காணி விபரம்:

வடமாகாணம் யாழ்ப்பாண டிஸ்திறிக் வலிகாமம் மேற்கு சங்கானை கோவிற்பற்று, தொல்புரம் இறை "குடியிருப்பு" பர. நில. இலா. ஒன்றரை. வீடும். கிணறும். எல்லை கிழக்கு கந்தர் பெண் சிவகாமனிஞதனம் வடக்கு ஒழுங்கை மேற்கு ஆசையர் வேலாயுதம் பெண் தங்கத்தின் காணிக்கு நடாத்தும் 4½ முழக் கையொழுங்கை. தெற்கு ஆசையர் வேலாயுதம் பெண் தங்கத்தின் ஆதனம்.

தா. செல்லையா,
கொமிசனரும் விலமதிப்பாளரும்
இல: 37.
கொழும்புத்துறை வீதி,
சுண்டிக்குளி, யாழ்ப்பாணம்
7-10-63.
M. 157 11-10-63.

## விற்பனவு விளம்பரம்

பருத்தித்துறை டிஸ்திறிக் கோட்டு 7328-ம் இலகக வழக்கில் 1963-ம்ஆ புரட்டாதிமீ 30உயைக் கொண்ட கோட்டுக் கட்டளைப்படி கீழே விபரிக்கப் பட்டிருககும் ஆதனம் 1963-ம்ஆ கார்ததிகை மீ 11-ம்உ திங்கட் கிழமை பிற்பகல் 4-30 மணி வரையில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப் படும்.

விபரம்:

வல்லுவெட்டி
1. கந்தையா பாலசிங்கம்
2. செல்லத்துரை துஷ்யந்தன்
3, பெண் மகேஸ்வரி
—வழக்காளிகள்.

எதிராக

உடுப்பிட்டி
நல்லதம்பி கிட்டிணசாமி
—எதிராளி.

அறவிடவேண்டிய தொகையின் விபரம்:

சித்தாரித்த தொகை:- ரூபா 1038-33. 15-2-62 தொடககம் 22-11-62 வரைக்கும் ரூபா 2500-க்கு 8 வீதவட்டி ரூபா 164, 22-11-62 தொடக்கம் 12-3-63 வரைக்கும் ரூபா 4192-33-க்கு 5 வீத வட்டி ரூபா 64-14 கூடிய ரூபா 4256-47. கோட்டுச்செலவு ரூபா 321-20. மொத்தம் ரூபா 4577-67. இதில் 9-5-1963 கோட்டில் கொடுபட்ட ரூபா 2000/- கழித்து மிகுதித்தொகை முழுவதும் அறவிட வேண்டியது,

ஆதனம்:

வல்லுவெட்டித்துறை இறை "மூக்கரவத்தை யேற்குக்கலட்டியும் திகதி வரவை செம்பாட்டுத் தாழ்வும்" இது 1942-ம் ஆ ஐப்பசி மீ 13-ந் உ உலாந்தா க. கணபதிப்பிள்ளையால் 6670-ம் இலக்கத்தில் விந்தாரிக்கப்பட்டு யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டு 1507/P என்னும் இலக்கப் பிரிவிடல் வழககில் அணைபட்ட படத்தின்படி நில. பர. 153. குளி 2 1/32. சொல்லப்பட்ட படத்தில் ...துண்டு நில. பர. 21 குளி 6. F என்று அடையாளமிட்ட கிணறும், எல்லை கிழக்கு வலவை வயித்தீசுவரன் கோயிலுக்குடைய ஆதனமும் குளமும் வடககு பாலசிங்கம் பெண் சிவக்கொழுந்துவுககுடைய ஆதனம். மேற்கு இளையதம்பி வயித்திலிங்கத்துக்கும் மறுபேருககுமுடைய ஆதனம். தெற்கு அருணாசலம் சுப்பிரமணியத்துககும் மறுபேருக்குமுடைய ஆதனம். இவ்வெல்லைககுட்பட்ட கிணறும் சேர முழுவதும் சொல்லப்பட்ட படத்தில் 9-ம் துண்டைப் பாவிக்கும் உரித்தும்.

S. C. Kanagasabai
கொம்மிசனர்
புலோலிகிழக்கு. 7-10-1963.
M 159 11-10-63

யாழ்ப்பாணம்
—ஐக்கிய இலாப நிதி—
1918-ம் ஆ ஸ்தாபிதமானது

100 ரூபா விகிதமான 5000 பங்குகள்
பங்குப்பணங்கட்டுமுறை.

மாசமொன்றுக்கு 1 ரூபா விகிதமாக 80 மாச காலத்திற்கு மாசந்தோறும் கட்டப்படவேண்டியது, குறித்த காலமுடிவில் பங்கொன்றுக்கு ரூபா 100 திருப்பிக் கொடுக்கப்படும். பங்குகள் எந்த நேரமும் வாங்கலாம்,

சேமிப்புப் பற்றுவரவு.

எச்சமிதி சராசரி 500 ரூபாவுக்குக் குறையாமல் இருக்குமானல் ஒருவிகித வட்டியுடன் சேமிப்புப் பற்றுவரவு செய்யலாம்.

தவணை வரையறுக்கப்பட்ட க்ஷேமப் பணம்

க்ஷேமப்பணம் 12 மாசம், 36 மாசம் என்னும் காலங்கள் வரையறுத்து ஏற்படும்வட்டியும் முறையே 6 விகிதமும் 8 விகிதமுமாகக் கொடுக்கப்படும்.

உண்டியல்கள்

கொழும்பிலுள்ள "நாஷனல்" வங்கியிலும் "இம்பீரியல்" வங்கியிலும் இந்தியாவிலுள்ள பிரதான பட்டினங்களிலும் மாற்றத்தக்கவிதமாகக் கொடுக்கப்படும். தொடுவாய் இராச்சியப் பகுதியிலுள்ளவர்களுக்குக் கொடுக்கவும் வாங்கவுமான விசேஷ ஒழுங்குகள் செய்யப்பட்டிருக்கின்றன.

கடன்

நகைகள் ஈடு வைத்துக்கொண்டு கடன் கொடுக்கப்படும். முதலையும் பாகம் பாகமாகக் கொடுக்கலாம்.

இன்னும் வேண்டிய விபரங்களை
என்மூலமாக அறிந்துகொள்ளலாம்.

S. கனகசபை
சிறுப்பர்.
Std. 14.

## கோட்டு விற்பனவு விளம்பரம்

இல. M.B. 4006.
1. மாரிமுத்து செல்லப்பாவும்
2. பெண் மகேஸ்வரி
பண்ணை றோட் கொட்டடி.
—வழக்காளி.

எதிராக

1. R துரைசிங்கமும்
2. பெண் நல்லம்மா
சண்டிலிப்பாய்
சண்டிலிப்பாய் காலம் சென்ற வேலாயுதர் காசிப்பிள்ளை கைம்பெண் நாகம்மாவின் ஆதனத்துக்கு கோட்டால் நியமிக்கப் பட்டவர்கள். —எதிராளிகள்.

யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டின் M.B. 4006-ம் இலக்க வழக்கில் எனக்குக்கிடைத்த கோட்டுக கட்டளைப்படி, பின்னுல் விபரிக்கப்படும் இருதுண்டுக் காணி 1963 ஹூ கார்ததிகை மீ 2 உ (2-11-63) சனிககிழமை முற்பகல் 10 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை:-முதல்வட்டி ரூபா 4935-ம் இதற்கு ரூபா 2500-க்கு 9-5-61 தீர்வைத்தகதி தொடக்கம் 14-12-61 வரை 100-க்கு 10 வீத வட்டியையும் பின் முழுத்தொகையும் இறுபடும்வரைககும் 5 வீத வட்டியும் கோட்டுச் செலவு 290-35, இதில் முழுத்தொகையால் ரூபா 1750-ம் கோட்டுச் செலவால 125-ம் கொடுபட்டது,

காணி விபரம்

1. வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக வலிகாமம் மேற்கு மானிப்பாய் கோயிற்பற்று சண்டிலிப்பாய் இறை 'அலுனி' பரப்பு நிலலாச்சம் 7-ம். வீடும் கிணறும் கிணற்றில் பங்கும் வான்பயிர் செய்பயிர்களும் அதைச் சேர்ந்தவைகளும் எல்லை கிழக்கும் வடக்கும் சுப்பிரமணியர் ராசசூரியரின் ஆதனம். மேற்கு பொன்னம்பலம் பெண் சின்னச்சிக்கும் காலம் சென்ற கடன்காரிக்கும் உரிய ஆதனங்களும், ஒழுங்கை முகப்பும், தெற்கு வேதவனும் சுப்பிரமணியத்தின் ஆதனமும். பதிவு இலக்கம் E 323/276.

2. மேற்படி சண்டிலிப்பாய் இறை "பெரியதோட்டம்" பரப்பு நிலலாச்சம் 2-ம். கிணற்றில் பங்கும் பனைகளும் மற்றும் வான்பயிர் செய்பயிர்களும். எல்லை கிழக்கு காலம்சென்ற கடன்காரி நாகம்மாவின் ஆதனம். வடக்கு பொன்னம்பலம் பெண் தங்கமுத்துவின் ஆதனம். மேற்கும் தெற்கும் ஒழுங்கை இத அடங்கலும். பதிவு இலக்கம் E 288/43.

சி. செ. மாரிமுத்து,
கொமிசனரும்,விலமதிப்பாளரும்
உத்தரவு பெற்ற ஏலதாரரும்,
விதானை வளவு, சித்தன்கேணி
21-9-63.
M 155 11-10-63.

## கந்தரோடையில் ஐப்பசிப் பூரணைவிழா

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

விளங்குகின்றன; நன்மையும் புண்ணியப் பசளையுந்தோன்ற நல்லவுதவியாகின்றன.

ஆகவே, உத்தமத் தாய்மை வழிபாடு, கலங்கி நெருக்கப்பட்டு, நோப்பட்டுத் துன்புறுத் தள்ளம்பாடியாடுமானல் திசைதவறுமானல், உலகமெல்லாம் நாலாபக்கங்களாலும்பெருந்தாழ்வையும்-கலக்கத்தையுமடையும்; புண்ணியப் பசளையின்றி வெம்பும். மேலோர் ஆணை எனலாம். எதுவேண்டும்! புண்ணியப் பசளையா? உத்தம தாய்மை சக்திநோன்பா? மகாபிரணவ நோன்பா? உத்தம நோன்பு விழாக்களா? இவைகள்தான் எமது பணி!

(மேன்மக்கள்:- பஞ்ச சீல ஒழுக்க முள்ளவர்; மேலோர் ஆணை.)

வித்துவக் கலைஞன்
ஆசி. சாந்தகுரு,

கந்தரோடை,
2-10-63

யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபையாருக்காக, வண்ணார்பண்ணை காங்கேசன்துறை வீதி 450-ம் இலக்கத்திலுள்ள, சைவப்பிரகாச யந்திரசாலையில் யாழ்ப்பாணம் பிறவுண்வீதி, 2ம் ஒழுங்கை, 2ம் இலக்கத்தில் வசிக்கும் திரு. ஐயம்பிள்ளை சின்னத்துரை அவர்களால் 11-10-1963 வெள்ளிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

ஆசிரியர்: நம. சிவப்பிரகாசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org